**மயிலாடுதுறை மாவட்டம்**

**மூன்றாம் திருப்புதல் தேர்வு – பிப்ரவரி 2023**

வகுப்பு : 12

**தமிழ்**

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 90

**பகுதி-1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 14 x 1 = 14**

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் "இளந்தமிழே" பாடல் இடம் பெற்ற நூல்
   (அ) மற்னவி (ஆ) நிலவுப்பூ (இ) காவ்யதர்சன் (ஈ) துறைமுகம்
2. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   (அ) யாப்பருங்கலக்காரிகை (ஆ) தண்டியலங்காரம் (இ) தொல்காப்பியம்
   (ஈ) நன்னூல்
3. மாதவி பெற்ற பட்டம்
   (அ) நாட்டியப்பேரொளி (ஆ) நர்த்தகி (இ) தலைக்கோலி (ஈ) நாட்டியமயூரி
4. எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று பாரதி வெளிப்படுத்துவது
   (அ) தனிக்குடும்ப முறை (ஆ) விரிந்த குடும்ப முறை (இ) தாய்வழிச் சமூக முறை
   (ஈ) தந்தை வழிச் சமூக முறை
5. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள்
   (அ) பத்து நாடுகள் (ஆ) எட்டு நாடுகள் (இ) ஐந்து நாடுகள் (ஈ) பதினெட்டு நாடுகள்
6. உலகப் புவி நாள் எது?
   (அ) ஆகஸ்டு-15 (ஆ) நவம்பர்-14 (இ) ஏப்ரல்-22 (ஈ) டிசம்பர்-23
7. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல்
   (அ) திருவருட்பா (ஆ) திருவாசகம் (இ) திருக்குறள் (ஈ) திருமந்திரம்
8. 'இலக்கியத்தில் மேலாண்மை' நூலின் ஆசிரியர் யார்?
   (அ) வெ. இறையன்பு (ஆ) வீரசோழன் (இ) பக்தவத்சல பாரதி (ஈ) உ.வே. சாமிநாதர்
9. சுரதா நடத்திய கவிதை இதழ்
   (அ) விண்மீன் (ஆ) இலக்கியம் (இ) காவியம் (ஈ) ஊர்வலம்
10. வெங்குருதி - இலக்கணக் குறிப்பு தருக.
    (அ) பண்புத்தொகை (ஆ) வினைத்தொகை (இ) உரிச்சொற்றொடர் (ஈ) உருவகம்
11. "பொய்யா வானம்" இலக்கணக் குறிப்பு தருக.
    (அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (ஆ) வினைத்தொகை
    (இ) உரிச்சொல் தொடர் (ஈ) பெயரெச்சத் தொடர்
12. திசை எட்டும் என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் யார்?
    (அ) பரலி சு. நெல்லையப்பர் (ஆ) சாந்தா தத் (இ) உத்தமசோழன் (ஈ) ஔவையார்
13. காப்பியம் எத்தனை வகைப்படும்?
    (அ) மூன்று (ஆ) இரண்டு (இ) நான்கு (ஈ) ஐந்து
14. முதல் கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர்
    (அ) குலோத்துங்கச் சோழன் (ஆ) உத்தம சோழன் (இ) இராசராச சோழன்
    (ஈ) இராசேந்திர சோழன்

**பகுதி-2 பிரிவு-1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
17. வசனம், கவிதை வேறுபாடு தருக.
18. ஒருமுக எழினி, பொருமுக எழினி குறிப்பு எழுதுக.

**பிரிவு-2**

**எவையோனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4**

19. புக்கில், தன் மனை சிறுகுறிப்பு வரைக.
20. நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்துக்களைக் குறிப்பிடுக.
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பிரிவு-3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க – பலகை
23. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    (அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.
    (ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்லு.
24. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.
    தின்மை – திண்மை
25. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.
    (அ) கிணற்றுத் தவளைபோல (ஆ) எலியும் பூனையும் போல
26. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.
    கலை – களை – கழை
27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    (அ) அமர்ந்தனன் (ஆ) செய்த
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    (அ) எத்திசை (ஆ) செந்தமிழ்
29. ஈரசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?
30. வெண்பாவில் ஈற்றுச் சீரில் இடம்பெறும் வாய்ப்பாடுகள் யாவை?

பகுதி-3 பிரிவு-1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.
34. இராமலிங்க அடிகள் கந்தவேலிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
36. கலைமுழுமை என்றால் என்ன?
37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் விவரிக்கவும்.
38. மையாடல் - விளக்குக.

பிரிவு-3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

39. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது) பொருள் வேற்றுமையணியை எடுத்துக்காட்டு கூறி விளக்குக.
40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.
41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
    (அ) யானைக்கும் அடி சறுக்கும். (ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
42. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?
43. வெண்பாவிற்குரிய இலக்கணம் யாது? தளை கூறுக. வெண்பாவின் வகைகள் யாவை?

பகுதி-4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி :** **3 x 6 = 18**

44. (அ) சிலப்பதிகார நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் எவ்வாறு கூறுகிறார்? (அல்லது)
    (ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.
45. (அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
    (அல்லது)
    (ஆ) மயிலை சீனி வெங்கடசாமி அவர்களின் சிறப்பை விளக்கி எழுதுக.
46. (அ) “சாலை விபத்தில்லா தமிழ்நாடு” இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? (அல்லது)
    (ஆ) ‘நடிகர் திலகம்’ என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.
47. அடிப்பிறழாமல் செய்யுள் வடிவில் தருக. **4 + 2 = 6**
    (அ) ‘துன்பு உளது’ எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
    (ஆ) ‘அறிவு’ என முடியும் குறள்

www.Padasalai.Net